
# மருந்து வேலை செய்யாத நிலை - AMR என்றால் என்ன?

NATIONAL DAIRY DEVELOPMENT BOARD

**மருந்து போட்டாலும் நோய் குணமாகாத நிலையில், அதைக் மருந்து எதிர்ப்பு (AMR) என்பார்கள். இதனால் மனிதர்கள், பசுக்கள் மற்றும் தாவரங்களில் வரும் நோய்களை குணப்படுத்துவது சிரமமாகவும், அதிக செலவாகவும் ஆகிறது.**



## மருந்து எதிர்ப்பு ஏற்படும் மூன்று முக்கிய வகைகள் என்ன?

- பேக்டீரியாக்கு மருந்து வேலை செய்யாதது
- இரத்தம் உறியும் பூச்சிகளுக்கு மருந்து வேலை செய்யாதது
- வயிற்றுப் பூச்சிக்கு மருந்து வேலை செய்யாதது

## எப்படி இது ஏற்படுகிறது?

பேக்டீரியா மருந்துகள், இரத்தம் உறியும் பூச்சி மருந்துகள் மற்றும் வயிற்றுப் பூச்சி மருந்துகள் வேலை செய்யாமல் போவதற்கான முக்கிய காரணங்கள் என்னவென்றால்

1. மருந்துகளை அதிகமாக அல்லது தேவையில்லாமல் போடுவது
2. பூரண டோஸ் போடாமல் குறைவாக மருந்து போடுவது
3. கால்நடைகள் வளர்ப்பில் சுத்தமாக இருக்காமல் இருப்பது

## *ஏன் கவலைப்படணும்?*

## மருந்து வேலை செய்யாததின் (AMR) விளைவுகள்

### மாடுகள் மீது தாக்கம்

- மாடுகளுக்கு மருந்து வேலை செய்யாமல் போகிறது
- சிகிச்சை செலவு அதிகரிக்கிறது
- பால் உற்பத்தி குறைகிறது




**AMR (மருந்து எதிர்ப்பு) விவசாயிகளின் வருமானத்தை குறைக்கிறது!**

### மனித ஆரோக்கியத்தில் பாதிப்பு

- நோய்கள் குணமாக கஷ்டமாகிவிடும்
- மருத்துவமனை செலவுகள் அதிகரிக்கும்





**குடும்பத்துக்கு சுகாதாரச் செலவு அதிகமாகும்!**

### உணவு பாதுகாப்பு (FOOD SAFETY)

பாலிலும் இறைச்சியிலும் மருந்து சேதங்கள் (residues) இருக்கலாம் — இதனால் விற்பனை நிராகரிக்கப்படலாம், நுகர்வோர்களுக்கு பாதிப்பு ஏற்படலாம்.

### விவசாயத்தின் மீது பாதிப்பு (AGRICULTURE IMPACT)

மண்ணில் உள்ள நன்மை தரும் பாக்டீரியாக்களும் மருந்துகளுக்கு எதிர்ப்பு வளர்த்து விடும். இதனால் பயிர்களின் வளர்ச்சி பாதிக்கப்படும் மற்றும் சுற்றுச்சூழலுக்கும் பீதியூட்டும்.

### சுற்றுச்சூழல் ஆரோக்கியம் (ENVIRONMENT HEALTH)

பசுக்களின் சாணம் மற்றும் சிறுநீரில் உள்ள மருந்து எதிர்ப்பு கிருமிகள் மற்றும் ஆன்டிபயாட்டிக் மீதங்கள் மண் மற்றும் நீரை மாசுபடுத்துகின்றன.

**இதனால் மனிதர்களிலும் பசுக்களிலும் AMR (மருந்து எதிர்ப்பு) அபாயம் அதிகரிக்கிறது!**



### இரத்தம் உறியும் பூச்சிகள் மீது மருந்து எதிர்ப்பு (ACARICIDE RESISTANCE)

இரத்தம் உறியும் பூச்சிகளை கட்டுப்படுத்தும் மருந்துகளை தவறாகவும், அடிக்கடி பயன்படுத்தினால், அவை அந்த மருந்துகளுக்கு எதிர்ப்பு வளர்த்துவிடும்.

**இதனால் அந்த பூச்சிகளால் பரவும் நோய்களின் அபாயம் அதிகரிக்கும்!**





### குடர்புழு நீக்க மருந்துகளுக்கு எதிர்ப்பு (Anthelmintic Resistance):

குடர்புழுக்களை ஒழிக்க பயன்படுத்தும் மருந்துகளை அதிகமாக அல்லது தவறாக பயன்படுத்தினால்,அந்த புழுக்கள் அந்த மருந்துக்கு எதிர்ப்பு வளர்த்துவிடும்.

**இதனால் பசுக்களின் உற்பத்தித் திறன் குறைகிறது!**

## பசுக்களின் உடல்நலம் காக்க என்ன செய்யணும்? (One Health – ஒரே உடல்நலம் முறை)

- பசுக்களுக்கு மருந்து (பூச்சி மருந்து, புழு மருந்து, ஆன்டிபயாடிக்) அதிகமாக போட வேண்டாம். நியாயமான அளவு மட்டும், மருத்துவர் சொன்னபடி போடணும்.
- பசுக்களை வளர்க்கும் இடம் தூய்மையாக வைக்கணும். வெளியே இருந்து வரும் வாகனம், மாடுபிடி நபர் போன்றவர்கள் நோய்கள் கொண்டு வராம தடுக்கணும்.
- பசுக்களின் மலம், மருந்துப் பாட்டல்கள் எல்லாம் குப்பையா வெளியே போடக்கூடாது. சரியான இடத்துல போட்டுடணும்.
- எந்த மருந்து, எவ்வளவு போடணும் என்பதை மருத்துவரிடம் கேட்டு தான் போடணும்.
- மருத்துவரை காணாமலே மருந்து தர்றத தவிருங்க! முடிந்த இடங்களில் மூலிகை மருத்துவத்தை பயன்படுத்துங்க!




பசுக்களுக்கு காய்ச்சல், குடர்புழு, பூச்சி தொல்லை, பேதி மாதிரி பிரச்சனைகள் வந்தா, அதுக்கான மூலிகை மருந்துகள் இருக்கே! எப்படிச் செய்வதுன்னு தெரிஞ்சிக்க QR code-ஐ ஸ்கேன் பண்ணி பாருங்க!

| மடிநோய் | குடற்புழு நீக்கம் | உண்ணிகள் | காய்ச்சல் | பேதி |
|---|---|---|---|---|

**மருந்து எதிர்ப்பு திறனைக் கட்டுப்படுத்துவோம்!**